நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 135 /2022

## P.W. 5 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | முருகன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 5** |
| வயது | : | 35 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 15–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 3.35PM

1. இந்த வழக்கில் அ.சா1 அமிர்தம் என்னுடைய சின்னம்மா என்றால் சரிதான். அ.சா2 சேட்டும் 3ம் எதிரி செல்வமும் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். நான் நெசவுத் தொழில் செய்கிறேன். எனது வீட்டிற்கும் அமிர்தா

என்பவரது வீட்டிற்கும் சுமார் 400 மீட்டர் தூரம் இருக்கும். நான் நெசவுத் தொழில் சொந்தமாக செய்து வருகிறேன். காலை 6.00 மணியிலிருந்து 7.00 மணிக்குள் எனது வேலையை தொடங்குவது வழக்கம்.

2. தறி வேலை செய்யும்போது வெளியே எதுவும் சத்தம் கேட்டால் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் கைத்தறியில் தான் நெசவு செய்து வருகிறேன். அதனால் சத்தம் கேட்கும். மெதுவாக பேசினால் சத்தம் கேட்காது என்றால் சரிதான். புகார் கொடுத்த அ.சா1 எனது நெருங்கிய சொந்தம் என்பதால் அவரது குடும்பத்தில் உள்ள ஒரு சில விஷயங்கள் எனக்கு தெரியும்.

3. அ.சா1 அமிர்தம் எதிரிகளுக்கு எதிராக சிவில் வழக்கு தாக்கல் செய்து தள்ளுபடி ஆனது எனக்கு தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எதிரி வீட்டின் கிழக்கு புறம் என்றால் சரிதான். 1ம் எதிரி வெங்கடேஷ் மற்றும் 2ம் எதிரி குமார் டிராக்டர் வைத்து அவருடைய நிலத்தை ஓட்டி கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான்.

4. ஆரம்ப முதலே செல்வத்துக்கு பாத்திப்பட்ட நிலத்தை அவர்தான் விவசாயம் செய்து வந்தார். செல்வம் அவரது விவசாய நிலத்தை உழவு செய்து கொண்டிருக்கும் போது தான் சேட்டு வந்து அந்த நிலத்தில் நின்று கொண்டு கேட்டார் என்றால் சரிதான். சேட்டு என்பவர் தனது வீட்டில் கோவில் மாதிரி வைத்துக் கொண்டு சாமி ஆடுவார் என்றால் சரிதான். அவ்வாறு சாமி ஆடி கீழே விழுகும் போது சேர்த்து இரண்டு பற்கள் விழுந்து விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. நான் தறி ஓட்டிக் கொண்டிருக்கும்போது எனது சின்னம்மா அமிர்தம் காலை 7:15 மணி சுமாருக்கு எனக்கு போன் செய்து உழவு ஓட்டுவது சம்பந்தமாக பிரச்சனை செய்து கொண்டிருப்பதாக தகவல் சொன்னார். அதன் பிறகு தான் நான் சம்பவத்துக்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்னால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை எந்த பதவி உள்ள போலீசார் விசாரித்தார் என்று எனக்கு குறிப்பாக தெரியாது. காவல்துறையினர் என்னை காவல் நிலையம் வரச் சொல்லி விசாரித்தார்கள். நான் காவல் நிலையம் போகும்போது காலை சுமார் எட்டு முப்பது மணி இருக்கும். சம்பவத்தன்று

எதிரிகளும் அமிர்தம் தரப்பினரும் மீது புகார் கொடுத்து இருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6. நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்னால் எத்தனை மணிக்கு சம்பவம் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. ஏழு மணிக்கு மேல் தான் நடைபெற்று இருக்கும். நான் 7.15 மணிக்கு தான் சம்பவ இடத்திற்கு வந்ததால் யார் யாரை அடித்துக் கொண்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

7. உண்மையில் எதிரிகள் தங்களது நிலத்தில் உழவு செய்து கொண்டிருந்தார்கள் என்றாலும் அமிர்தம் தரப்பினர்தான் அங்கு சென்று எதிரிகளை அடித்துவிட்டார்கள் என்றாலும் எதிரிகள் புகார் கொடுக்க சென்றதால் அதிலிருந்து தப்பிக்க வேண்டி அ.சா.1 அமிர்தம் என்பவர் தனது ஆடையை கிழித்துக்கொண்டு அ.சா.2 சேட்டு என்பவர் தனக்கு ஏற்கனவே பற்கள் விழுந்து விட்டதை சாதகமாக பயன்படுத்திக் கொண்டும் அவர்களது மகன் அ.சா.3 சண்முகம் தனக்கு தானே காயங்களை ஏற்படுத்திக் கொண்டு மூவரும் சேர்ந்து காவல் நிலையத்தில் பொய் புகார் அளித்துள்ளார்கள் என்றாலும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி இல்லை. எதிரிகளுக்கும் இந்த வழக்கில் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.56 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்கா ெட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/– நா. கோபாலகிருஷ்ணன்,**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 135/2022

## P.W. 7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் |
| தந்தை / கணவர் பெயர் | : | சாமிராஜன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 24 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 15–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் . அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 3.58PM.

1. சம்பவத்தைப் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சண்டை முடிந்த பிறகு தான் பார்த்தேன். நானும் லோகநாதன் என்பவரும் தறி வேலைக்காக அங்கு சென்று இருந்தோம். இந்த வழக்கு சம்பந்தமாக அமிர்தம் என்பவர் புகார்

கொடுத்தார். போலீசார் இரண்டு மூன்று இடங்களில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

2. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. 4 வருடத்துக்கு மேலாகிறது போலீசார் எனக்கு படித்துக் காட்டினார்களா என்று எனக்கு தெரியாது. அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் படம் போட்டு இருந்த பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். வீட்டின் அருகில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். காலை 11 மணி சுமாருக்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். குறிப்பாக யார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. அங்கிருந்த ஆறிலிருந்து ஏழு நபர்கள் சாட்சிகளை எடுத்துப் போட்டார்கள் மொத்தமாக எத்தனை நபர்கள் கையெழுத்து போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சாட்சி கையப்பம் செய்த அதே பேப்பரில் தான் மேற்படி ஏழு நபர்களும் கையெழுத்து போட்டார்கள்.

3. இந்த வழக்கில் புகார் அளித்த அ.சா.1 அமிர்தம் என்னுடைய அத்தை என்பதால் அவர் ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—04.06PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/— நா. கோபாலகிருஷ்ணன்,**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**